செ.வெ.எண் :633 நாள்: 28.09.2021

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மு.மாஹின் அபுபக்கர் அவர்களின் முன்னிலையில் தஞ்சாவூர் மாவட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் இன்று 28.09.2021 மாவட்ட ஆட்சியரகத்தில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 22 பேரூராட்சிகளின செயல் அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவி பொறியாளர்கள் கலந்துக்கொண்டனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் சிறுபாலங்கள் ஆகியவற்றை சிறப்பு தூர்வாரும் பணி 20.09.2021 முதல் 25.09.2021 வரை நடைபெற்றதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மொத்தம் 109.025 கி மீட்டர் நீளமுடைய வடிகால்களில் 48.50 கி மீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளதாகவும் மீதம் 60.525 கி.மீட்டர் நீளமுடைய வடிகால்களை அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 02.10.2021க்குள் தூர்வாரி, பணியினை முடிக்க பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. பேரூராட்சி பகுதியிலுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பாசன வாய்க்கால்களை இயந்திரங்களை கொண்டு தூர்வாரிடவும், வரும் பருவமழை காலத்தில் பேரூராட்சியில் எந்த ஒரு பகுதியிலும் மழைநீர் தேங்காத நிலையினை ஏற்படுத்திடவும், பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் வளம் மீட்பு பூங்கா செயல்பாடுகள் குறித்தும், மாவட்ட ஆட்சித்தலைவரால் ஆய்வு செய்யப்பட்டது. சுணக்கமாக உள்ள பேரூராட்சிகளில் 100% திடக்கழிவுகள் சேகரம் செய்யப்பட்டு 100% தரம் பிரிக்கப்பட்டு இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயார் செய்யப்பட வேண்டும் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**